2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். நன்றி சொல்லுங்கள். கேட்டதையெல்லாம் தந்துவிட்டார்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு செலவானாலும் எங்கள் மாவட்டத்தில் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

செவிலியர் கல்லூரி

***10249—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையின்கீழ் செவிலியர் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டியிலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள விருதுநகர் மாவட்டத்தில் 100 இருக்கைகளுடன் தற்போது ஓர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகின்றது. அதுபோல் கோவில்பட்டியிலிருந்து 70 கி.மீ. தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளியானது 100 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி அல்லது ஒரு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்திட வேண்டும் என்பது இந்த அரசின் இலக்கு என்று ஏற்கெனவே அறிவித்தார்கள். எனினும்கூட,

தூத்துக்குடியில் ஏற்கெனவே ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி இயங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கோவில்பட்டி பகுதியில் புதிய கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான பணிகளையெல்லாம் 2020–லேயே நிலமாற்றம் சம்பந்தமான பணிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அதற்கு எந்த முக்கியத்துவமும் தரப்படாமல் அந்தப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இது கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றது. நிச்சயமாக எதிர்காலத்தில், வருகின்ற நிதியாண்டில் அதனைச் செய்து தருவதற்கான முயற்சியினை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கோவில்பட்டி நகரம் நாளும் பொழுதுமாக வளர்ந்து வருகின்ற நகரமாக இருக்கின்றது. அந்த நிலையில் பல்வேறு துறைகள் சார்ந்த கல்வி நிறுவனங்கள் அங்கே செயல்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியில் மருத்துவத் துறை சார்ந்த செவிலியர் பயிற்சிப் பள்ளி வேண்டும் என்கிற அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல பல்வேறு பூர்வாங்கப் பணிகள் நில வகைப்பாடு மாற்றம் மட்டுமல்லாமல் அரசாணையும் வெளியிட்டு நிதி ஒப்புதலுக்கு அழைக்கப்பட்ட நேரத்தில் தேர்தல் அறிவிப்பு வந்த காரணத்தினால் அது நிலுவையில் இருக்கின்றது. அந்தப் பணியை விரைவாக இந்த அரசு செய்து அங்கே செவிலியர் பயிற்சிக் கல்லூரியை அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக்கு முன்னால் என்று மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.*

2022 ஏப்ரல் 26]

ஆனால், அந்த நிலமாற்றம் மேய்க்கால் புறம்போக்கு வகைப்பாடு நிலத்தில் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்கு சுகாதாரத் துறைக்கு நில மாற்றம் செய்தது 2020 செப்டம்பர் 16 ஆம் தேதிதான். அதற்குப்பிறகு எந்தப் பணியும் நடைபெறவில்லை. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினரின் விருப்பமான தூத்துக்குடி மாவட்டத்தில், குறிப்பாக கோவில்பட்டி அரசு மருத்துவமனையை மேம்படுத்துவது, மருத்துவக் கட்டமைப்பை உயர்த்துவது என்பது அவசியமான ஒன்று.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *அந்த வகையில் அந்தக் கல்லூரி அங்கே அமைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதுமட்டுமல்லாது, அவர் சொன்னதைப்போல, கோவில்பட்டி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் 10½ கோடி ரூபாய் செலவில் தாய்–சேய் நல மையக் கட்டடம் ஒன்று கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் அந்தப் பணி முடிவடைய இருக்கிறது.*

அதோடு மட்டுமல்லாமல், பாம்புக் கடி, தேள் கடி மற்றும் விஷம் அருந்தியவர்கள் அதிக பேர் அந்த மருத்துவமனைக்கு வருவதால், அதற்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கு ரூ.40 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு கட்டடங்களையும் இன்னும் 10 நாட்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாகத் திறந்து வைக்க இருக்கின்றார்கள் என்ற செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அனைத்து நிலைகளிலுமே நில வகைப்பாடு செய்யும் பணிகள் நடைபெற்ற நிலையில், அந்தப் பகுதி மக்களுடைய எண்ணம் என்னவென்று சொன்னால், நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துவிட்டது; திருமணம் மட்டும் நடைபெற வேண்டும் என்பதுதான். ஆகவே, நாங்கள்*

[2022 ஏப்ரல் 26

நிச்சயதார்த்தத்தைச் செய்த நிலையில், இந்த அரசு திருமணத்தை நல்லபடியாக நடத்தித் தர வேண்டும். அந்தவகையில் செவிலியர் பயிற்சிக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயதார்த்தம் எல்லாம் செய்யவில்லை. அவர் சொல்லியிருக்கின்றார். உண்மையில் என்ன நடந்திருக்கிறது என்றால் நில மாற்றம் மட்டும்தான் நடந்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெண் பார்த்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மேய்க்கால் புறம்போக்கை நில மாற்றம் மட்டும்தான் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் பரவாயில்லை. பெண் பார்க்கும் சூழ்நிலை மட்டும்தான் தொடங்கியிருக்கிறது. இருந்தாலும்கூட இந்தத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. நிச்சயம் நடத்திவைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உள்ள மாவட்ட மருத்துவக் கல்லூரியில், சிறுநீரக பாதிப்பு ஏற்படுகின்ற நோயாளிகளுக்கு dialysis செய்ய 5 machines தான் இருக்கின்றன. அந்த 5 machine–களிலும் ஒரு patient–க்கு 4 மணி நேரம் ஆவதால், ஒரு நாளைக்கு 20 நபர்களுக்குமேல் அங்கே dialysis செய்ய முடியவில்லை. அதனால், நூற்றுக்கணக்கான நோயாளிகள் வரும்போது, அவர்களை வேறு இடத்திற்குப் பரிந்துரை செய்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது.

ஆனால், மாவட்ட அளவில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்தான் அதிகப்படியான சிறுநீரக பாதிப்பு ஏற்படுகின்ற நோயாளிகள் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு ஆய்வைக்கூட செய்து பார்க்கலாம். அதாவது சிறுநீரக சிறப்பு மருத்துவர். . .

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் சிறுநீரக சிறப்பு மருத்துவர் இல்லை. அதனால், சிறுநீரக சிறப்பு மருத்துவரை நியமனம் செய்ய வேண்டும். அங்கேயே நியமனம் செய்வதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் இருக்கின்ற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே 5* Dialysis Units *மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருகின்ற நிதியாண்டில் இன்னும் 5* Dialysis Units *அங்கே கூடுதலாகப் பொருத்தப்படும். அவர் சுட்டிக்காட்டிய அந்த காலிப் பணியிடங்களும் நிரப்பப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனைக்கு, தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு இணையாக, 3,000 வெளி நோயாளிகளும், 1,000 உள் நோயாளிகளும் வருகிறார்கள். தனியார் மருத்துவமனைகள் ஏராளமாக இருக்கக்கூடிய அந்த இடத்தில் தனியார் செவிலியர் கல்லூரி, தனியார் செவிலியர் பள்ளிகள் மட்டும்தான் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற ஏழ்மையானவர்களுக்கு கூடுதலாக பணம் கொடுத்து படிக்க முடியாத ஒரு சூழ்நிலையில், 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்லக்கூடிய வகையில் நடக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த ஆட்சியில், நம்முடைய அரசின் மூலமாக கும்பகோணம் மாநகராட்சியிலுள்ள மருத்துவமனைக்கு ஒரு செவிலியர் கல்லூரி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மாவட்ட அரசு பொது மருத்துவமனையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ரூ.10 கோடி செலவிலான CEmONC கட்டடம் ஒன்றை ஏற்கெனவே திறந்து வைத்திருக்கின்றார்கள். அவர் சொன்னதைப்போல, அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அல்லது செவிலியர் பயிற்சிப் பள்ளி, மாவட்டத்திற்கு ஒன்று என்கின்ற வகையில் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தில் ஏற்கெனவே செவிலியர் பயிற்சிக் கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டதற்குப் பிறகு, இரண்டாவது கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட புலியால் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையின்படி கருத்துரு பெறப்பட்டு, இன்னும் அது ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதேபோல, காரைக்குடி தொகுதி, சங்கராபுரம் ஊராட்சியில் மக்கள்தொகை ஏறக்குறைய 60,000–க்கும் மேற்பட்டு இருக்கிறது. அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று அதற்கும் கருத்துரு பெறப்பட்டு, இன்னும் அதற்கான எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே, வருகின்ற மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளாக எந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையமும் தமிழகத்திற்கு வரப்பெறவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தீவிர முயற்சியின் காரணமாக தற்போது 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டும் வரப்பெற்றிருக்கின்றன. 38 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த 38 மாவட்டங்களில் எங்கே அதிகமான தேவை இருக்கிறதோ அந்த இடங்களைக் கண்டறிந்து, 25 மாவட்டங்களில் மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தொகுதியில் 2, 3 வேண்டுமென்று பட்டியலிட்டிருக்கிறார்கள். நிச்சயம் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வகையில், அதுவும் பின்தங்கிய மாவட்டங்கள் என்ற வகையில் கருத்தெடுப்பு நடத்தப்பெற்று, அமைக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில், மத்திய பகுதியில்* Pentland Hospital *இருக்கிறது. அதற்கு 5½ ஏக்கர் இடம் இருக்கிறது. அதை ஒரு முழுமையான மருத்துவமனையாக உருவாக்கித் தந்தால், வேலூர் மாநகர மக்கள், ஏழை, எளிய மக்கள் பயனடைவார்கள். பாம்புக்கடி போன்று ஏதாவது விஷக்கடி ஏற்பட்டால் அருகிலுள்ள அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது, போகின்ற வழியிலேயே பிரச்சினையாகிவிடுகிறது. வேலூரில்* CMC *மருத்துவமனை இருக்கிறது.* Sri Narayani Hospital *இருக்கிறது. இவையெல்லாம் தனியார் மருத்துவமனைகள். வேலூர் மாநகரம் தற்போது மாநகராட்சியாக இருப்பதால், அந்த* Pentland Hospital*-ஐ முழுமையான மருத்துவமனையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே உருவாக்கித் தந்தால் சிறப்பாக இருக்கும். இங்குள்ள ஏழை, எளிய மக்களுக்குப் பயன்படும் என்பதால், இதை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மருத்துவக் கட்டமைப்பில் முதலிடத்தை சென்னை வகித்துக்கொண்டிருந்தாலும், இரண்டாவது இடத்தை கோவை வகித்துக்கொண்டிருந்தாலும், மூன்றாவது இடம் என்று எடுத்துக்கொண்டால் அது வேலூர் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு மிகப் பெரிய அளவில் தனியார் மருத்துவமனைகளும், அரசு மருத்துவக் கல்லூரியும் அங்கே அமைந்திருக்கின்றன. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, புதிதாக அமையவிருக்கின்ற நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஒன்றை அங்கே அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்படவுள்ளதால், ஏற்கெனவே இருந்த அரசு மருத்துவமனையை தொடர்ந்து நடத்தி, 100 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் மிகப் பெரிய அளவில் புதிய மருத்துவக் கல்லூரி அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. கடந்த 4 நாட்களுக்கு முன்புதான் அந்த மருத்துவக் கல்லூரிக்குச் சென்று, அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணிகளை ஆய்வு செய்திருக்கிறோம். அடுத்த மாதம் புற நோயாளிகள் அங்கு வருவதற்கான கட்டமைப்பு தொடங்கப்படவிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கலாம். கிருஷ்ணகிரியில் இருக்கின்ற ஒட்டுமொத்த மக்களின் மருத்துவத் தேவைகளை நிச்சயம் அந்த அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிறைவேற்றித் தரும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

புதிய சுற்றுலா மையம்

***2227—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிய சுற்றுலா மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதலில் வணங்குகிறேன்.*

நாகூரில் உள் கட்டமைப்பை மேம்படுத்தி, புதிய சுற்றுலா மையம் அமைக்க அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூரைப் பொறுத்த அளவில் உலகப் புகழ்பெற்ற திருத்தலம் இருக்கிறது. அங்கே வரக்கூடிய இலட்சோப இலட்சம் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லை. கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் இல்லை. சாலை வசதிகள்கூட இன்னும் சீராக இல்லை. பேருந்து நிலையம் என்கிற பெயரில் பேருந்து நிறுத்தம்தான் இருக்கிறது. சில்லடி கடற்கரை இருக்கிறது. அங்கே, இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். ஆனால், அங்கு*